சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 07.11.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 32/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-5 |
| சாட்சியின் பெயர் | : | விஜயராஜ் |
| தந்தை பெயர் | : | யுவராஜ் |
| கிராமம் | : | கோவில் பத்து |
| தாலுக்கா | : | வலங்கைமான் |
| தொழில் | : | கூலி வேலை |
| வயது | : | 42 |

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 07 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா-1 சுந்தர்ராஜ் என்பவரை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. வழக்கு விவரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

அரசு தரப்பு தொடர் விசாரணை

கடந்த 15.02.2025 ஆம் தேதி அ.சா-1 சுந்தர்ராஜ் மற்றும் எதிரிக்கும் பிரச்சனை ஏற்பட்டதாக போலீசார் விசாரணை செய்ய எங்கள் கிராமத்திற்கு கடந்த 16.02.2025 ஆம் தேதி மதியம் 12.00 மணியளவில் வந்திருந்தனர் என்றும், செம்மாங்குடி புதுத்தெருவில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்ததாவும், அந்த பார்வை மகஜரில் நானும் எங்களது ஊரை சேர்ந்த பாலகுமார் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் பார்வை மகஜர் தயார் செய்யும் போது, உடனிருந்து சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றும், நன்னிலம் காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார் மேற்படி விவரம் சொல்லியுள்ளேன் என்றும், சொன்னால் சரியல்ல. எதிரி எனக்கு தெரிந்தவர் என்றும் அவரை இந்த வழக்கில் இருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.11.07 17:11:11 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.